| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**<br>**இரண்டாம் தவணைப் பரீட்சை -2023**<br>**புவியியல் – I** | |

| | | | |
|---|---|---|---|
| **தரம் - 11** | | 61 T I | **மூன்றுமணித்தியாலம்** |

**சுட்டெண்:**

**மேலதிகவாசிப்பு 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

- ❖ இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.
- ❖ ஒவ்வொருவினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயேவிடைஎழுதுக.

புவியியல் I

❖ *1 தொடக்கம் 5வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக் குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*

1. பப்புவாநியூகினி ............................................ கண்டமேடையில் அமைந்துள்ள தீவாகும்.

**(ஆபிரிக்கா/அவுஸ்ரேலியா/ஆசியா)**

2. ஆசிய நாடுகளில் ஊழியச் செறிவு கொண்ட பயிர்ச்செய்கை நடவடிக்கையாக ........................................................................ விளங்குகின்றது.

**(நெற்செய்கை/கோதுமைச் செய்கை.தென்னைச் செய்கை)**

3. வரையறுக்கப்பட்ட பொருளாதார வலயத்தில் மீன்பிடித்தல் ................................................................ என அழைக்கப்படும்.

**(நன்னீர் மீன்பிடி/உவர் நீர் மீன்பிடி / கடல் நீர் மீன்பிடி)**

4. ........................................... உர உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற உருமாறிய பாறையாகும்.

**(காரீயம் /வைரம் /தொலமைற்)**

5. சிவனொளிபாதமலை, ஹோட்டன் சமவெளி போன்ற பிரதேசங்களில் ........................................ ............................................ காடுகள் பரவிக் காணப்படுகின்றன.

**(மலைநாட்டுஈரவலயக் / அயன மண்டலமழைக் /உலர்கலப்புஎன்றும் பசுமையான)**

❖ *6தொடக்கம் 10 வரைதரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து, அவை சரியாயின் 'ச' ஐயும் பிழையாயின் 'பி'ஐயும் சுற்றிவட்டம் வரைக.*

6. படிவுவீழ்ச்சிச் செயன்முறையினூடாகப் புவியைவந்தடையும் நீரின் ஒருபகுதி மேற்பரப்பில் கழுவுநீரோட்டமாகப் பாய்கின்றது. ச / பி

7. இலங்கையில் பால் தரும் பசுக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு மீவனபலன வள மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ச /பி

8. இலங்கையில் கனியஎண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கொலன்னாவை என்ற இடத்தில் அமைந்துள்ளது. ச /பி

9. உலகின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 65%மான நிலப்பரப்பு சனத்தொகை அடர்த்திமிக்க பிரதேசங்களாகும். ச /பி

10. இலங்கையில் போதியளவு காரீயவளப் பரம்பல் காணப்பட்டாலும், தற்போது அகழ்வுச் செயற்பாடுகள் இரண்டு சுரங்கங்களில் மட்டுமே நடைபெறுகின்றன. ச/பி

❖ ***11 தொடக்கம் 19வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.***

11. உலகில் மிகஉயரமான இடத்தில் அமைந்துள்ள ஏரி ................................................. ஆகும்.

12. தரைஓடுகள், மட்பாண்டப் பொருட்கள் தயாரிக்க ............................................................ பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது.

13. .................................................................. இயல்புக்கேற்ப மண், மண்ணின் சேர்க்கை, மண் வகை, மண்ணின் நிறம் என்பன தீர்மானிக்கப்படுகின்றன.


14. குறிப்பிட்ட நிலப்பரப்பினுள் ஏற்படும் சனத்தொகை அதிகரிப்பு ........................................................ எனப்படும்.

15. உயர் நிலங்களில் சாய்வின் உயரம் குறைந்த பகுதிகளில் மெய்சாய்வும்,உயரம் கூடிய பகுதிகளில் குத்தச் சாய்வும் காணப்படும் போது அது .................................................................... என அழைக்கப்படும்.

- **கீழே தரப்பட்ட வரைபினைப் பயன்படுத்தி *16* தொடக்கம் *19* வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**தெரிவுசெய்யப்பட்டஆசியநாடுகளில் துறை மூலமான**

**மொத்தஉள்நாட்டுஉற்பத்தி 2017**




16. வரைபின் படி இரு நாடுகளிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகளவு சதவீதத்தைக் கொண்டுள்ள துறையாக...................................................................... காணப்படுகின்றது.

17. வரைபின் படி இரண்டு நாடுகளிலும் ....................................................................... துறைமிகக் குறைந்தளவு பங்களிப்பை வழங்கியுள்ளது.

18. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறை 30%மான பங்களிப்பை வழங்கியிருந்த நாடு ................................................................... ஆகும்.

19. சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறை ........................... வீதமான பங்களிப்பைவழங்கியுள்ளது.

❖ **20 தொடக்கம் 24வரையுள்ள வினாக்களுக்கு 'அ'மற்றும் 'ஆ' என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள தகவல்களின் ஒழுங்கிற்கேற்ப 'ஆ' நிரலில் உள்ள தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

20.

| **'அ'** பயிர்கள் | **'ஆ'** மாவட்டங்கள் |
|---|---|
| 1. கொடித்தோடை | A - கிளிநொச்சி |
| 2. ஸ்ரோபரி | B - மாத்தளை |
| 3. மிளகு | C - இரத்தினபுரி |
| | D - பதுளை |

(1) D,A,B (2) C,D,B (3) D,B,C (4) B,A,C ( )

21.

| **'அ'** கனியமணல் | **'ஆ'** பிரதேசம் |
|---|---|
| 1. சிலிக்கா | A - நிலாவெளி |
| 2. செர்கன் | B - வல்லிபுரம் |
| 3. இல்மனைற் | C - நாயாறு |
| | D - பலாங்கொட |

(1) B,D,A (2) D,C,B (3) C,A,B (4) D,A,B ( )

22.

| **'அ'** நாடுகள் | **'ஆ'** சனஅடர்த்தி நகரங்கள் |
|---|---|
| 1. பிறேசில் | A - கெய்ரோ |
| 2. எகிப்து | B - பொஸ்ரன் |
| 3. ஐக்கியஅமெரிக்கா | C - றியோடி ஜெனிரோ |
| | D - சிட்னி |

(1) B, A, D (2) C, B, A (3) D,C,B (4) C, A, B ( )

23.

| **'அ'** வலுஉற்பத்திநிலையம் | **'ஆ'** வலுச்சக்தி |
|---|---|
| 1. விமலசுரேந்திர | A - நிலக்கரி |
| 2. அம்பேவெல | B - சூரியசக்தி |
| 3. நுரைச்சோலை | C - காற்று |
| | D - நீர் |

(1) C, B, A (2) D, C, A (3) B, D, C (4) A, D, B (..........)

24. ‘அ’ ‘ஆ’

பண்பாட்டுஅம்சங்கள் நிறங்கள்

1. கால்வாய் A - மஞ்சள்
2. வீட்டுத்தோட்டம் B - சிவப்பு
3. நீதிமன்றம் C - நீலம்
D - பச்சை

(1) C, A, B (2) C, D, B (3) C, A, D (4) C, B, D (...........)

❖ **25 தொடக்கம் 36 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

25. சூழல் நழுவுவீதச் செயற்பாடு நிகழும் வளிமண்டலப் படை
(1) மாறன் மண்டலம் (2) படைமண்டலம்
(3) இடைமண்டலம் (4) வெப்பமண்டலம் (.......)

26. இலங்கைக்குத் தேயிலைப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்திய ஐரோப்பியர்
(1) ஒல்லாந்தர் (2) ஸ்பானியர்
(3) போர்த்துக்கேயர் (4) பிரித்தானியர் (.......)

27. பிற்ஸ்பேர்க், நியூஇங்கிலாந்து போன்ற இரும்புருக்கு உற்பத்தி மையங்கள் அமைந்துள்ள நாடு
(1) ரஷ்யா (2) ஐக்கியஅமெரிக்கா
(3) ஐக்கிய இராச்சியம் (4) சீனா (.......)

28. இலத்திரனியல் உபகரணங்கள் குறுகிய காலத்தில் காலாவதியானதாக மாறிவிடுவற்கான காரணம்
(1) விலைஅதிகரிப்பு (2) போட்டிப் பொருட்கள்
(3) தொழில்நுட்பவளர்ச்சி (4) பிரதியீட்டுப் பொருட்கள் (.......)

29. கதிர்காமம், ஹிக்கடுவை, களுத்துறை போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய சுற்றுலாவலயம்
(1) தென்கரையோரம் (2) பண்டையநகரங்கள்
(3) கொழும்புநகரம் (4) வடபிரதேசம் (.......)

30. சிறுதென்னை முக்கோண வலயத்தில் அமைந்துள்ள பிரதேசங்கள்
(1) கொழும்பு, குருநாகல், சிலாபம்
(2) மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்
(3) மித்தெனிய, ரன்ன, தங்கல்ல
(4) நீர்கொழும்பு, புத்தளம், குருநாகல் (.......)

31. பின்வருவனவற்றுள் தீப்பாறைகளைக் கொண்ட சரியான விடைத்தொகுதி
(1) சுண்ணக்கல், நிலக்கரி, தயோரைற்
(2) காரீயம், கருங்கல், மாக்கல்

(3) கருங்கல், பசோல்ட், கப்புரோ

(4) வைரம், சலவைக்கல், கருங்கல் (.......)

32. மேற்பரப்பு நீர் என அழைக்கப்படவது

(1) உலகின் சமுத்திரங்கள், கடல்களில் உள்ளநீர்

(2) மண்ணினால் உறிஞ்சப்படும் நீர்

(3) தாய்ப்பாறையின் மேல் தேங்கிநிற்கும் நீர்

(4) ஆறு,க ால்வாய், பனிப்பிரதேசங்களிலுள்ள நீர் (.......)

33. பின்வருவனவற்றுள் விஞ்ஞான ரீதியான ஆய்வு நடவடிக்கைகளுக்காக மட்டும் உட்பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள வனசீவராசி ஒதுக்கு

(1) சரணாலயங்கள்

(2) தேசியபூங்காக்ககள்

(3) இயற்கைஒதுக்குகள்

(4) கடும் பாதுகாப்பிற்கு உட்பட்ட இயற்கை ஒதுக்குகள் (.......)

34. இலங்கையின் ஈரவலயத்திற்கு உரித்தான மண்வகை

(1) செம்மஞ்சள் லட்சோல் மண்

(2) செங்கபிலமண்

(3) செங்கபில செம்பூரான் மண்

(4) கல்சியமற்ற செங்கபிலமண் (.......)

35. அபிவிருத்தியை அளவிடும் பழைய குறிகாட்டி

(1) மனிதஅமுக்கச் சுட்டெண் (2) தலாவீதவருமானம்

(3) மனிதஅபிவிருத்திச்சுட்டெண் (4) கொள்வனவுசக்தி (.......)

36. இலங்கையின் 1 : 50,000 இடவிளக்கப்படங்களில் கறுப்பு நிறத்தினைப் பயன்படுத்தி வரைந்துகாட்டப்படும் அம்சம்

(1) சமவுயரக்கோடு (2) பாதுகாக்கப்பட்ட வன எல்லை

(3) மணல்மேடு (4) நிர்வாகஎல்லைகள் (.......)

- **A, B, C, Dஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளைஅவதானித்து 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A - | 1. | காலநிலை | B - | 1. | வளநுகர்வு |
| | 2. | இயற்கைஅனர்த்தம் | | 2. | கைத்தொழில் வளர்ச்சி |
| C - | 1. | பிறப்புவீதம் | D - | 1. | மண்வளமிழத்தல் |
| | 2. | சனத்தொகை | | 2. | சேதனவிவசாயம் |

37. முதலாவதன் மோசமான பாதிப்புக்களை இழிவளவாக்குவதற்குக் காரணமாகும் இரண்டாவதினைக் குறித்துக் காட்டும் தலைப்புச் சோடி யாது?

(1) A (2) B (3) C (4) D (.......)

38. முதலாவதில் ஏற்படும் அதிகரிப்புக்கு இரண்டாவது காரணமாவதைக் குறித்துக் காட்டும் தலைப்புச் சோடி யாது?

*(1)* A *(2)* B *(3)* C *(4)* D (.......)

*39.* இரண்டாவதில் ஏற்படும் அதிகரிப்பும், வீழ்ச்சியும் முதலாவதன் விளைவாகும் என்பதைக் குறித்துக் காட்டும் தலைப்புச் சோடி யாது?

*(1)* A *(2)* B *(3)* C *(4)* D (.......)

*40.* முதலாவதில் ஏற்படும் ஒழுங்கின்மைகள் இரண்டாவதற்குக் காரணமாகும் என்பதைக் குறித்துக் காட்டும் தலைப்புச் சோடி யாது?

*(1)* A *(2)* B *(3)* C *(4)* D (.......)

($1 \times 40 = 40$ புள்ளிகள்)